1981 ஆகஸ்ட் 24]

அமல்படுத்துவதில் தொழில் அதிபர்கள் சரியாகச் செயல்படுவதில்லை என்றும் தகவல் வந்திருக்கிறது. எனவே இதை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்துவது பற்றி அந்த இயந்தரத்தை எப்படி மாற்றலாம், அதிகாரிகளை இன்னும் எப்படி அதிமாக்கச செய்யலாம் என்பதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: 'பால்பாக் வேஜஸ்' விதிகள் பற்றி, அதைத் திருத்துவது பற்றி அரசின் ஆலோசனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'பால்பாக் வேஜஸ்' படி 500 பீடி என்பது போதுமானதல்ல. அதை ஆயிரம் பீடியாக நிச்சயிக்க வேண்டுமென்று சொல்லி தொழிற்சங்கங்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா? அதுபற்றி அரசு ஆலோசித்துருக்கிறதா? என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 'பால்பாக் வேஜஸ்' பெறவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு வந்து அரசாங்கமாக நிர்ணயித்ததுதான், இந்த 'பால்பாக் வேஜஸ்'. இப்போது தொழிற்சங்கங்களிடமிருந்து சில முறையீடுகள் வருகின்றன. ஒரு ஜனநாயக ஆட்சி என்பதால் அவற்றையும் இந்த அரசு பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கும்.

திரு. இரா. கருப்பையா: இந்த 'பால்பாக் வேஜஸ்' எந்தத் தேதியிலிருந்து இந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் உறுதியாகக் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்தத் தேதி இப்போது எனக்கு ஞாபகம் இல்லை.

மதுரை மாவட்டத்தில் வைகை ஆற்றின் இருபுறமும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம்.

*வினா எண் 34—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் வைகை கால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அழிந்த நிலையிலுள்ள கிராமப்பகுதிகளின் ஓரங்களில் ஆற்றின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால் நிலக்கோட்டை தொகுதி அக்கரைப்பட்டி, நடக்கோட்டை, குல்லிச்செட்டிபட்டி, பறையப்பட்டி ஆகிய கிராமங்களின் அருகில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அமுல் நடத்தப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) தல அதிகாரிகளை நிலக்கோட்டை தாலுக்காவல் அக்கரைப்பட்டி, நடக்கோட்டை, குலிச்செட்டிப்பட்டி, பறையப்பட்டி ஆகிய கிராமங்களில் வைகை ஆற்றின் இருபுறமும் வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டும் திட்டம் பற்றி ஆய்வு செய்யுமாறு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஆய்வு செய்யச் சொல்லியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்; அதை வரவேற்கிறேன். ஆனால், தற்போது கட்டயிருக்கும் இடத்தில் மருதா நதி, மஞ்சள் ஆறு ஆகிய இரண்டும் ஒன்றாகக் கலந்து வைகையில் கலந்து பெரு வெள்ளம் ஏற்படுகின்றது. தற்போது மழையில்லை; மழைக் காலங்களில் அங்கே மிகவும் மோசமான நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே, மேலும் நாள்கடத்தாமல் அதிகாரிகளை வெகு விரைவிலே இந்த 1981 ஆம் ஆண்டிற்குள்ளாக இந்த வேலையை ஆரம்பிப்பதற்கு வழிமுறைகளைச் செய்யுமாறு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் ஆய்வுப் பணிகள் துவக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். கூடிய விரைவிலே இதை நிறைவேற்றுவதற்கு அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, வைகை மதுரைக்கு கிழக்கே போகும்போது, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பெரும் பகுதிகளையும், மற்றும் கரைப் பகுதிகளையும் சேதப்படுத்துவதோடு பல கண்மாய்களும், வாய்க்கால் பகுதிகளும் மேடிட்டுபல சிரமங்கள் ஏற்படுவதால், இவைகளைக் கருத்திலே கொண்டு உடனடியாகத் தடுப்புச்சுவர் போடுவதோடு, அங்கே தண்ணீர் தேக்கப்படாமல் தாராளமாகச் செல்வதற்கான வழிமுறைகளைச் செய்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, வைகை, பெரியாறு போன்றவைகளைச் செம்மைப்படுத்துவதிலே பொதுவான பிரச்னைகள் இருக்கின்றன. மதுரையிலிருந்து இராமநாதபுரம், சிவகங்கைப் பகுதிகளிலே தேவையான பகுதிகளில் தடுப்புச் சுவர் கட்டச் சொல்லி முதல்வர் அவர்கள் ஆணையிட்டு, அந்த வேலை தனியாக நடந்து கொண்டிருக்கிறது. இங்கே தனியாக தன் தொகுதியைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அது இதுவரை பரிசீலிக்கப்படாமல் இருந்தது. இப்போது ஆய்வு செய்வதற்கு உத்தரவிட்டிருக்கிறோம்.